இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 12-04-2025

# தீர்ப்பின் சிறப்பு என்ன?

தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்களுக்கு அனுமதி தராமல் அதன் மேல் படுத்து தூங்கிக் கொண்டிருந்தார் ஆளுநர் ரவி. இது 'சட்டவிரோதமானது' என்று உச்சநீதிமன்ற நீதியரசர்கள் தீர்ப்பு அளித்தார்கள். இதன்பிறகும், 'இந்தத் தீர்ப்பில் பெரிய வெற்றி எதுவும் இல்லை' என்று சில தற்குறிகள் தொலைக்காட்சி ஊடகங்களில் ஊளையிட்டுக் கொண்டு இருப்பதைப் பார்க்க முடிந்தது.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வு அளித்த தீர்ப்பின் சிறப்பு என்ன?

**தமிழ்நாடு அரசு தனது உரிமையாக எதைக் கேட்டதோ, அதை வழங்கி இருக்கிறது இந்தத் தீர்ப்பு. அதுதான் தீர்ப்பின் சிறப்பு ஆகும்.**

**நீட் விலக்கு மசோதாவை ஆளுநர் நிறுத்தி வைத்த போது, "தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய சட்ட முன்வடிவை ஆளுநர் நிறுத்தி வைக்க முடியும் - உதாசீனப்படுத்த முடியும் என்றால் - இந்த இந்தியத் துணைக்கண்டத்தில் மாநிலங்களின் கதி என்ன? அரசியல் சட்டம் வகுத்துத் தந்துள்ள ஒன்றிய - மாநில அரசுகளின் உறவு எங்கே போகும்? பல்வேறு இனம், மொழி, கலாச்சாரம் பண்பாடு கொண்ட மக்களின் நிலைமை என்ன? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசின் கொள்கை முடிவை, வெறும் நியமனப் பதவியில் அமர்ந்திருக்கும் ஓர் ஆளுநர் மதிக்காமல் திருப்பி அனுப்புவது மக்களாட்சித் தத்துவத்துக்கே எதிரானது அல்லவா? பிறகு எந்த நம்பிக்கையில் மக்கள் வாக்களிப்பார்கள்? யாரை நம்பி வாக்களிப்பார்கள்? என்பதுதான் நாம் எழுப்ப வேண்டிய கேள்வி ஆகும். வேற்றுமையில் ஒற்றுமை என்பதுதான் இந்தியத் துணைக்கண்டத்தின் பண்பாடு. அதனைச் சிதைக்கலாமா? இவற்றை எல்லாம் சிந்திக்கத் தெரிந்தவர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பினார்.**

இதனை வலியுறுத்தும் வகையில் மிக முக்கியமான தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொண்டு வந்தார் முதலமைச்சர் அவர்கள்.

9.1.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் அவர்கள், "மாநில மக்களின் குரலாக விளங்கும் சட்டமன்றங்களில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு அந்தந்த மாநில ஆளுநர்கள் ஒப்புதல் வழங்க குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசையும், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களையும் வலியுறுத்துவது என்றும்;

மக்களாட்சித் தத்துவம் மற்றும் மாட்சிமை பொருந்திய இச்சட்டமன்றத்தின் இறையாண்மை ஆகியவற்றிற்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் தொடர்ந்து தமிழ்நாடு மக்களின் நலனுக்கு எதிராகச் செயல்படுவதைத் தவிர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்டமியற்றும் அதிகாரத்தை நிலைநாட்டும் வகையில், இப்பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு உரிய காலத்திற்குள் ஒப்புதல் அளித்திட வேண்டுமென்று, ஆளுநருக்கு உரிய அறிவுரைகளை ஒன்றிய அரசும், மாண்புமிகு குடியரசுத் தலைவரும் உடனடியாக வழங்கிட வேண்டும் என்றும் இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது" என்ற தீர்மானத்தை முதலமைச்சர் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தைத் தான், உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பாக அளித்துள்ளது.

★ **மசோதா மீது ஒரு மாதத்துக்குள் ஆளுநர் முடிவெடுக்க வேண்டும்.**

★ **மசோதாவை நிறுத்தி வைப்பதாக இருந்தால் மூன்று மாதத்துக்குள் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.**

★ **மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதாக இருந்தால் மூன்று மாதங்களுக்குள் அதனைச் செய்ய வேண்டும்.**

★ **மறுபரிசீலனை செய்வதற்காக மசோதாவை மாநில அரசுக்கு அனுப்பி, அதே மசோதாவை இரண்டாவது முறையாக ஆளுநருக்கு வந்தால் அதற்கு உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும்.**

\- **என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் வரையறுத்துவிட்டார்கள். இதுதான் மாண்புமிகு முதலமைச்சரின் சட்டசபைத் தீர்மானத்தின் உள்ளடக்கம் ஆகும்.**

"மாநில மக்களின் குரலாக விளங்கும் சட்டமன்றங்களில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு அந்தந்த மாநில ஆளுநர்கள் ஒப்புதல் வழங்க குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்யப்பட வேண்டும்" என்று கேட்டார் முதலமைச்சர் அவர்கள். அத்தகைய கால நிர்ணயத்தைச் செய்துள்ளது உச்சநீதிமன்றத் தீர்ப்பு.

ஆளுநர் ரவி என்ன சொல்லித் திரிந்தார்? 'நான் நிறுத்தி வைத்தாலே நிராகரிக்கப்பட்டதாக அர்த்தம்' என்று கொக்கரித்தார். இவர் ஏதோ நாட்டின் அதிபர் போலச் சொன்னார். "இந்த ஆணவம் கூடாது, அப்படி எந்த அதிகாரமும் உங்களுக்கு இல்லை" என்று சொல்லி விட்டார்கள் நீதிபதிகள்.

**அரசமைப்பின் 200ஆவது விதிப்படி சட்டமன்றங்களில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். நிறுத்தி வைத்தால் காரணத்தை உடனடியாகச் சொல்ல வேண்டும். குடியரசுத் தலைவருக்கு அனுப்பினாலும் காரணம் சொல்ல வேண்டும். மீண்டும் அரசு அனுப்பினால் அதற்கு ஒப்புதல் தர வேண்டும் - என்று ஆளுநர்களுக்கு மிகச் சரியான கடிவாளத்தை உச்சநீதிமன்றம் போட்டுள்ளது.**

**இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்களை, குடியரசுத் தலைவருக்கு அனுப்பக் கூடாது, அது சட்டவிரோதமானது என்று சொல்லி விட்டது உச்சநீதிமன்றம்.**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்களின் உரிமையை நிலைநாட்டி இருக்கிறது உச்சநீதிமன்றம். நியமனப் பதவியில் உட்கார்ந்து கொண்டு நிர்வாகத்தை முடக்கி, மக்களாட்சி மாண்பை நிர்மூலமாக ஆக்கத் துடிக்கும் ஆளுநர்களின் ஆணவச் செயல்களுக்கு கட்டுப்பாடு விதித்திருக்கிறது உச்சநீதிமன்றம்.

**தமிழ்நாடு முதலமைச்சர் சொன்னதைப் போல, 'இது இந்தியாவுக்கே வாங்கித் தரப்பட்ட தீர்ப்பு' ஆகும். பிரிட்டிஷ் ஆட்சியின் கவர்னர் ஜெனரல்களைப் போல நினைத்துக் கொள்பவர்களின் பின் மண்டையில் தட்டி இருக்கிறார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.**



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.4.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக மாணவரணி செயலாளர் இரா. ராஜீவ் காந்தி தலைமையில் மாணவரணியினர் சந்தித்து, மாண்பமை உச்சநீதிமன்றம், ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக தீர்ப்பளித்ததை வரவேற்றும், நீட் தேர்வு முறையை அகற்றுவதற்கான சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தி தீர்மானம் நிறைவேற்றியதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் உள்ளார்.

# மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி!

## உங்களில் ஒருவன் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

**எந்தச் சட்டமன்றத்தில், "தமிழ்நாடு" என்று இந்த மாநிலத்திற்குப் பெயர் சூட்டி மாநில உரிமைகளின் குரலைப் பேரறிஞர் அண்ணா உரக்க முழங்கினாரோ, எந்தச் சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை முத்தமிழறிஞர் கலைஞர் நிறைவேற்றினாரோ அந்தச் சட்டமன்றம் தான் வலிமையானது, ராஜ்பவனுக்கு அதிகாரமில்லை என்று உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பைப் பாராட்டி அறிவிப்பை வெளியிட்டேன்.**

முதலமைச்சரான என் அறிவிப்பைத் தொடர்ந்து சட்டமன்றத்தில் உள்ள தோழமைக் கட்சிகளின் உறுப்பினர்கள், மற்ற கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பினை ஆதரித்துப் பேசினார்கள்.

இந்த வழக்குத் தொடரப்பட்டதிலிருந்தே வழக்கறிஞர்களுடன் தொடர்ந்து ஆலோசித்து, மாநில உரிமைகளை நிலைநாட்ட எடுத்து வைக்க வேண்டிய வாதங்கள், ஆதாரங்கள் குறித்து கலந்துரையாடி வந்தேன்.

**கழகம் எப்போதும் சொல்லி வருவது போல, "ஆளுநர் பதவி என்பது ஒன்றிய - மாநில அரசுக்கிடை யிலான தபால்காரர் பணிதான்" என்பதை உச்சநீதிமன்றம் தெளிவாகத் தீர்ப்புரைத்திருக்கிறது.**

தீர்ப்பு வெளியான நாளில், கூட்டத் தொடர் நிறைவடைந்ததும், உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் வாதாடி, வெற்றித் தீர்ப்பு கிடைத்திடக் காரணமாக இருந்த முகுல் ரோஹத்கி, ராகேஷ் திவேதி, அபிஷேக் மனு சிங்வி ஆகிய மூத்த வழக்கறிஞர்களைத் தொடர்பு கொண்டு நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்தேன்.

இந்த வழக்கின் வெற்றிக்காக அயராது பாடுபட்ட கழகத்தின் மாநிலங்களவை உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் வில்சன் அவர்கள் நேரில் சந்தித்து என்னிடம் தீர்ப்பின் விவரங்களைத் தெரிவித்தபோது, தலைவர் கலைஞர் சொன்னது போல 'வின்'சன்னாக வில்சன் இருப்பதைச் சுட்டிக்காட்டி அவரைப் பாராட்டி மகிழ்ந்தேன்.

மாநில உரிமைக்கான திராவிட முன்னேற்றக் கழக அரசின் தொடர் சட்டப் போராட்டத்தில் இந்தத் தீர்ப்பு முக்கியமான வெற்றி என்பதால், தங்கள் மாநிலங்களில் ஆளுநரின் அத்துமீறல்களால் ஜனநாயகத்தைக் காக்கப் போராடுகிற அரசுகளும் தமிழ்நாட்டின் 'திராவிட மாடல் அரசு' பெற்றுத் தந்துள்ள தீர்ப்பினை முன்மாதிரியாக வைத்து தங்களின் வழக்குகளை முன்னெடுத்துச் செல்லும் நிலை உருவாகியுள்ளது.

கேரள மாநில முதலமைச்சர் சகாவு பினரயி விஜயன், இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினைப் பாராட்டி கருத்து வெளியிட்டார். பத்திரிகைகள், தொலைக்காட்சி ஊடகங்கள் எல்லாவற்றிலும் முதன்மையான செய்தியாக இந்தத் தீர்ப்பு இடம்பெற்றது. பல்வேறு கட்சிகள், அமைப்புகள், இயக்கங்களின் தலைவர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள பெரியோர்கள் எனப் பலரும் தொடர்ந்து வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வெற்றித் தீர்ப்பின் மகிழ்ச்சியைப் பாராட்டுவதற்கு தாய்க் கழகமான திராவிடர் கழகத்தின் தலைவர் மானமிகு ஆசிரியர் அய்யா அவர்கள் நேரில் வருகை தந்தார். "சமூகநீதியின் சரித்திர நாயகன் என்று உங்களைச் சொல்லி வருகிறோம். இப்போது மாநில உரிமையின் காவலராகவும் இருக்கிறீர்கள்" என்று வாழ்த்தினார். அவருடைய வாழ்த்துகளைப் புன்னகையுடன் ஏற்றுக்கொண்டு, "காவல் காக்கும் வேலையைத்தானே மக்கள் என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அதைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன்" என்று சொன்னேன்.

நீண்ட பொதுவாழ்வு அனுபவம் கொண்ட ஆசிரியர் அய்யா உடனே தனக்கேயுரிய சொல்லாற்றலுடன், "சௌகிதார் என்று பிரதமர் மோடி தன்னைத்தானே சொல்லிக்கொண்டார். ஆனால், நீங்கள்தான் சமூகநீதிக்கும் மாநில உரிமைக்குமான உண்மையான காவலர். மக்களின் காவலர்" என்று பாராட்டினார்.

தாய்க்கழகத்தின் பாராட்டு எப்போதுமே கூடுதல் உழைப்புக்குத் தெம்பு தரக்கூடியது. அதனால்தான், தமிழ்நாட்டின் பல்கலைக்கழகங்களில் **ஆளுநரின் அத்துமீறல்களைத் தகர்த்தெறிந்த வெற்றித் தீர்ப்பு வெளியான வேகத்தில், தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை சிதைக்கும் 'நீட்' தேர்வுக்கு எதிரான நமது சட்டப்போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டம் ஏப்ரல் 9-ஆம் நாள் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.** சமூகநீதியிலும் மாணவர்களின் நலனிலும் அக்கறை கொண்ட கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்று கருத்துகளைத் தெரிவித்தனர்.

**சமூகநீதிக்கும் - மாணவர்களுக்கும் - மக்களுக்கும் எதிரான பா.ஜ.க.வினர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்றதும், அவர்களின் வழியில் முதன்மை எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வினரும் புறக்கணித்து, தங்கள் எஜமான விசுவாசத்தை வெளிப்படுத்தினர்.**

மாநில உரிமை காக்கும் போராட்டத்தின் முன்னோடியான தி.மு.கழகம், 'நீட்' தேர்விலும் விலக்குப் பெறும் வகையில் தமிழ்நாட்டின் தனித்தன்மையை சட்டப் போராட்டத்தின் வழியே முன்னெடுக்கத் தீர்மானித்து, ஆதரவு சக்திகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. ஆளுநரின் அதிகாரம் என்ன என்பதைத் தெளிவாக்கிய உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஒரு தொடக்கம். நீட் தேர்வு தொடர்பான வழக்கிலும் இது தொடரும்.

**"மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி" என்று நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் மொழிந்த முழக்கத்தை முன்வைத்து, நீதியின் வாயிலாக இந்தியாவின் ஜனநாயகத்தையும் கூட்டாட்சித் தன்மையையும் காத்திடும் பேரியக்கமாக தி.மு.க., தன் போராட்டத்தைத் தொடரும்.**

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

அன்புடன்,

**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
பங்குனி 27
10-04-2025.